## திருச்சபையில்

# பொதுநிலையினரின் எழுச்சி



அருட்திரு. எஸ். ஜே. இம்மனுவேல்

## உட்புகுமுன்

1987ஆம் ஆண்டு பொதுநிலையினரின் ஆண்டாக முழுத்திருச்சபையிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இவ்வாண்டு ஐப்பசி மாதத்தில் பொதுநிலையினரைப்பற்றி நடைபெறவிருக்கும் ஆயர் அவை (Bishop's Synod) திருச்சபையின் வரலாற்றிலே ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்துமென்பதில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட புரட்சியின் முக்கிய கட்டம் ஒன்று இந்த ஆயர் அவையில் இடம்பெறவேண்டுமென்று பல திசைகளிலிருந்தும் நீதியான எதிர்பார்ப்புகள் பல எழுகின்றன: முன்னொருபோதுமில்லாத வகையில் நீண்ட ஆழமான ஆய்வு ஆயத்தங்களும் நடைபெறுகின்றன.

கடந்த 1986ஆம் ஆண்டில் ரோக்கியோவில் நடந்த ஆசிய திருச்சபை ஆயர்களின் நான்காவது நிறைவு கூட்டத்தின் மையப்பொருள் "திருச்சபையிலும் உலகிலும் பொதுநிலையினரின் அழைப்பும் பணியும்". நாம் இக்கூட்டத்திற்கு ஆயத்தம் செய்த நீண்ட வெளியீட்டை (இவ் ஆங்கில வெளியீட்டை வருங்காலத்தில் தமிழில் வெளியிடுவோம்) மையப்பொருளாக வைத்து, கூட்ட ஆரம்ப தினத்தில் நாம் வெளியிட்ட கருத்துக்களின் சாரமே இக் கைநூலில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

தமிழ் திருச்சபைகளும் பொதுநிலையினரின் மறுமலர்ச்சியிலே பங்கெடுக்கவேண்டுமென்ற விருப்பத்தினால் தூண்டப்பட்டு இதை வெளியிடுகிறோம்.

உதவியளித்த செல்வி சாளற் அல்பிறட், அருட் சகோ. யூஜின் பிரான்சிஸ், அருட் சகோ. இ. பொனவென்சர், அருட் சகோ. யோ. அக்னஸ் அனைவருக்கும் எனது நன்றி.

எஸ். ஜே. இம்மானுவேல்

புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
1-5-1987

### அட்டைப்பட விளக்கம்

ஆழமாக வேரூன்றி, பரந்து விரிந்த கிளைகளுடன் செழித்து வளரும் மரம், முதிர்ச்சியடையும்பொழுது, வானத்துப் பறவைகளுக்குப் புகலிடமாக அமைகின்றது. அதேபோல, திருச்சபையில் பொதுநிலையினர் தமக்குரிய உரிமைகளுடன் வளர்ந்து, வாழ்ந்து உலகில் உயிருள்ள விருட்சம்போல முதிர்ச்சியடைந்து, அமைதிதேடும் மானிடர்க்கு அடைக்கலமாக அமையவேண்டும்.

அ. யேசுராஜா
திருகோணமலை

## 1. முன்னுரை :

### ஆண்டவரின் வார்த்தை அப்படியே ஆகட்டும்

மோயீசனுக்கு இறைவன் கூறினர் : " நீ அந்தப் பாறையை அடி. அடிக்கவே மக்கள் குடிக்கத் தண்ணீர் வெளிப்படும். அந்த நீரை மக்கள் பருகுவார்கள், " (யாத். 17) இதைத்தான் அன்று மோயீசன் இஸ்ராயேல் தலைவர்களின் முன்னிலையிற் செய்து முடித்தார்.

இயேசு அப்போஸ்தலரைப் பார்த்து "உங்கள் வலைகளைப் படகுக்கப்பால் வீசுங்கள். அங்கே ஏராளமான மீன்களைப் பிடிப்பீர்கள்" என்ருர். அவர்கள் அப்படியே செய்தனர். மீன்கள் ஏராளமாய் விழுந்ததால் அவர்கள் வலையை இழுக்க முடியவில்லை. (அரு. 21.)

ஆவியானவர் 23ஆம் அருளப்பருக்கு ஏவியதாவது : " திருச்சபையை நவீனமாக்க (aggionamento/up-dating) ஒரு சங்கத்தைக் கூட்டவும்", சங்கம் ஒன்று கூடியது. திருச்சபையிலே ஒரு புதியவிழிப்புப் பிறந்தது.

ஆவியானவர் மீளவும் 2வது அருளப்ப சின்னப்பரை ஏவுகின்ருர். " பொதுநிலையினரைப் பற்றிய ஆயர் அவை ஒன்றை அழையுங்கள்", (ஆயர் அவை கூடுகின்றது) பொதுநிலையினர் திருச்சபையாக மாறுகின்றனர்.

## 2. 1987 ஆயர் அவை

சங்கைக்குரிய கருதினல்மார்களே, பேராயர், ஆயர்களே, மதிப்புக்கும் அன்புக்குமுரிய சீமான், சீமாட்டிகளே, இங்கு நான் கொடுக்கும் சிந்தனைகள் முதற்கண் எங்கள் மத்தியிலும், எங்கள் திருச்சபைகள் மத்தியிலும், பொதுநிலையினர் பற்றி நாங்கள் கொண்டிருக்கவேண்டிய விழிப்புணர்ச்சியைத் தூண்டுவதற்கு உதவியாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். அத்துடன் வரவிருக்கும் 1987 ஐப்பசி ஆயர் அவைக்கு நாங்கள் செய்யும் தூர ஆயத்தமாகவும், அதற்கு நாங்கள் அளிக்கும் பங்காகவும் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றேன்.

வரவிருக்கும் ஆயர் அவையைப்பற்றிய தப்பான கணிப்பிற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. அதாவது, பொதுநிலையினரை முதிர்ச்சியற்ற பிள்ளைகளாகப் பாவித்து, ஆயர்கள் தாம் மாத்திரம், சிந்தனை, தீர்மானம்செய்யும் அவையாகக் கருதக்கூடாது. பொதுநிலையினரைப் பற்றி திருச்சபையில் இன்று நடந்துகொண்டிருக்கும் பெரிய மாற்றங்

களுக்கும், வளர்ச்சிக்கும் ஆயர் அவையின் பங்கு இன்றியமையாத தாகும். ஏனெனில் மக்களின் ஏவுதல்களையும் சிந்தனைகளையும் இனங் கண்டுகொள்வதும், அவைகளை ஆவியின் உதவியுடன் திருச்சபையின் படிப்பினை ஆக்குவதும், திருச்சபையின் வாழ்வில் நடைமுறைப்படுத்து வதும் ஆயர்களின் ஆசிரியத்துவத்திற்கே (magisterium-teaching authority) அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே ஆசிய திருச்சபைகள் என்ற மட்டில் இந்தச் சிந்தனைகளை எமது சகோதர திருச்சபைகளோடு பகிர்ந்துகொள்வதும், அச் சிந்தனைகள் ஆவியினால் பக்குவப்படுத்தப் பட்டு, அதன் வழியாக ஆயர் அவையின் தீர்மானங்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதும் எமது கடமையாகும்.

ஆசிய, ஆபிரிக்க திருச்சபைகள் தூய ஆவியில் தாம் பெற்ற அனு பவத்தை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின்போது, உலக திருச்சபை களோடு பகிர்ந்து கொள்வதற்கு அவை தகுந்த ஆயத்தமும் ஆற்றலு மின்றி இருந்தன. இரண்டாம் வத்திக்கான் சங்கம் நான்கு நூற்றாண்டு கள் நீடித்த அமைப்புத் திருச்சபையின் (institutional church) முடி வாகவும் இரண்டாம் உலக யுத்தத்தின்பின் மேற்கு ஐரோப்பாவில் பிறந்த பல கிறிஸ்தவ இயக்கங்களின் சிகரமாகவும் விளங்கியது. விவி லிய இயக்கம், ஒற்றுமை இயக்கம், திருவழிபாட்டு இயக்கம், பொது நிலை அப்போஸ்தலத்துவ இயக்கம் (bibilical, ecumenical, liturgical and lay apostalate movements) இவைகள் மேற்கு ஐரோப்பிய திருச் சபைகளை இரண்டாம் வத்திக்கான் சங்க சிந்தனைகளுக்கும், மாற்றங் களுக்கும் ஆயத்தப்படுத்தியிருந்தன. ஆனால் ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளிலுள்ள இளம் திருச்சபைகளில் அப்பேர்ப்பட்ட இயக் கங்களோ, சிந்தனைகளோ வளர்ந்திருக்கவில்லை.

அத்தோடு சங்கத்தின் பேச்சு மொழியும் இலத்தீன் மொழியாக இருந்தது. ஆகையினால் ஆசிய திருச்சபைகளின் (ஆயர்களின்) பங்கெ டுப்பு மிகக் குறைவாக இருந்தது. இருந்தும் சங்கத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகள், நமது திருச்சபைகளின் நலனுக்காக, முயற்சிகள் எதுவுமின்றி மடியில் விழுந்த நற்கனிகள் போலாயின! (உ-ம் நமது கோரிக்கை யின்றி தமிழ் மொழி வழிபாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.)

ஆனால் சங்கத்தில் பின், நமது திருச்சபைகள் வளர்ந்து முதிர்ச்சி யடைந்திருக்கின்றன. உலக திருச்சபையானது நமது அநுபவ சிந்தனை களை ஆவியின் ஏவுதல்களாக மதித்து வேண்டி நிற்கின்றன.

வரவிருக்கும் ஆயர் அவை, ஒரு தனிப்பெரும் அவை; ஒரு விதத் திற் குட்டி வத்திக்கான் சங்கத்தைப் போன்றது. ஏனென்றால் சங்கத் தைத் தொடர்ந்து இருபது ஆண்டு மேய்ப்புப்பணி அநுபவத்தில்,

முதற் தடவையாக, பெரும்பான்மையினராயிருந்தும் திருச்சபையின் கரைக்கு ஒதுக்கப்பட்ட பொதுநிலையினர் (marginalised majority) விடயம், சங்கத்தின் ஆணி ஏடுகளான ''உலகின் ஒளி'',''இன்றைய உலகில் திருச்சபை'' போன்றவற்றின் படிப்பினைகளின் அடிப்படையில் ஆராயப்படவிருக்கின்றன.

## 3. வத்திக்கான் சங்கத்தின் வார்த்தையும், கண்ணோட்டமும்

உலகில் இருக்கும் திருச்சபையில், பொதுநிலையினர் கொண்டிருக்க வேண்டிய அழைப்பு, பணி, இவைகளைத் தெரிந்துகொள்ள, நிச்சயமான அல்லது கருத்து நிறைந்த வழி, வத்திக்கான் சங்கத்தின் வார்த்தைகளை வெறும் வார்த்தைகளாக நினைவுகூர்வதன்று. மாறாக, மாறும் உலகில் வளர்ந்துவரும் திருச்சபையின் அழைத்தல், பணி அடிப்படையிலே பொதுநிலையினரின் அழைத்தலையும், பணியையும் கண்டுகொள்வதிலேதான் தங்கியுள்ளது. இதைச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு வத்திக்கான் சங்கத்தின் ஆவியையும், கண்ணோட்டத்தையும் மீளக் கொணர்வதும், மீள உணர்வதும் அத்தியாவசியம். வத்திக்கான் சங்கத்தின் வார்த்தைகள், அச்சிட்ட வார்த்தைகளாயினும் அவற்றின் கண்ணோட்டம் இன்றும் வத்திக்கான் நகருக்குத் தொலைவிலுள்ள ஆசிய மக்களின் மத்தியிலேயும் உயிருடன் உலாவி உய்விக்கும் சக்தியாக இருக்கின்றது.

## 4. பொதுநிலையினர்-குருக்கள் உறவு, உரையாடல்

பொதுநிலையினர் திருச்சபையிலும், தொடர்ந்து உலகிலும் எவ்வகை அங்கத்துவம் வகிக்கிறார்கள் என்பதைக் கண்டுகொள்வதே எமது ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆயர் சங்கத்தின் ஆயத்தத்திற்காக ரோமை அதிகாரிகளினால் கொடுக்கப்பட்ட ஏடு (Lineamenta 7, 8) பொதுநிலையினர் திருச்சபையின் பெயராலே செயற்படத் தகுதி கொண்டிருக்கிறார்களா? அல்லது, திருச்சபையின் உண்மை வெளிப்பாடாகப் பேச, செயற்பட வல்லமை கொண்டுள்ளார்களா? என்று, சந்தேகித்த போதிலும், பொதுநிலையினர் தாம் திருச்சபையாக இயங்கச் சக்தி கொண்டவர்கள் என்ற உண்மையைச் சந்தேகமின்றி ஏற்றுக்கொண்டது.

வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகள். பொதுநிலையினருக்கு மாத்திரமல்ல, குருக்கள் ஆயர்களுக்குமே ஒரு புதிய திருச்சபை அங்கத்துவம் கொடுக்க வழி வகுக்கின்றது. இதன் காரணமாகத்தான் சென்ற

ஆண்டின் (1986) மாசி மாதத்திலே திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் வரவிருக்கும் ஆயர் சங்கத்திற்குத் தேவையான அண்மை ஆயத் தங்களைப்பற்றிப் பேசும்போது, பொதுநிலையினருக்கும் குருக்களுக்கு மிடையே முழுமுரமாக்கப்பட வேண்டிய உறவு உரையாடலைப்பற்றி எடுத்துரைத்தார். "ஆயர் சங்கத்திற்கு முன்பதாக இருக்கும் ஆயத்த காலத்திலே, ஆயர்களையும், குருக்களையும் பொதுநிலையினருடன் எல்லா மட்டத்திலுமான உறவு உரையாடலில் ஆழமாக ஈடுபடத் தூண்டுகிறேன்" என்றார்.

## 5. முழுத்திருச்சபையியலில் பொதுநிலையினர்

பொதுநிலையினருக்கு தனியாக ஓர்இயல் ஆரம்பிப்பது புத்தியன்று. ஏனென்றால், கடந்த காலத்திற் குருக்களைப்பற்றி அப்படியொரு இயல் —திரு ஆட்சி இயல் (Hierachiology) வளர்ந்ததின் விளைவாக, பல தப்பான அபிப்பிராயங்கள் தோன்றியிருக்கின்றன. அவ்வாறே திரு ஆட்சியியல் பொதுநிலையினரியல் (Laicology) என்று இரு இயல்களை வளர்ப்பது திருச்சபைக்குள்ளே ஆழமான பிரிவை உண்டாக்கும். அத்தோடு குருக்களும் எங்களைப் பற்றியதெல்லாம் ஐயமின்றித் தெளிவாயிற்று. இப்போது பொதுநிலையினரைப்பற்றித்தான் ஆராயவேண்டியுள்ளது, என்ற தப்பபிப்பிராயத்தையே கொண்டிருப்பார்கள்.

உலகிலுள்ள திருச்சபையில் பொதுநிலையினர் என்ற பதம் (theme) உண்மையிலேயே முழுத்திருச்சபையியலைச் (total ecclesiology) சார்ந்த விடயமாகக் கையாளப்பட வேண்டும். அப்படிக் கையாளுவதுதான் பொதுநிலையினருக்கு மாத்திரமன்றி குருக்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும்.

இன்று குருக்களுக்கும், பொதுநிலையினருக்கும் இடையேயுள்ள வேறுபாடுஆதியில் இறைத்திட்டத்திற்கு ஏற்றதாக இருந்தது. இதில் இறைவன் கொண்ட நோக்கம் என்னவென்றால், இறை அரசைக் கட்டுவதிலே திருச்சபை அங்கத்தினர் வெவ்வேறு பகுதிகளாகத் தம்மை அமைத்துப் பயனளிக்கும் விதமாகச் (Functional distinction) செயற்பட வேண்டுமென்பதே (திருச்சபை 32).

இந்த நல் நோக்குடைய பிரிவானது, துரதிஷ்டவசமாகத் திருச்சபைக்குள்ளே பிளவுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் ஒடுக்குமுறைகளையும் ஏற்படுத்தியுள்ளது. அத்தோடு இறையரசைக் கட்டியெழுப்புவதில் திருச்சபை செய்யவேண்டிய பணிக்கு முட்டுகட்டையாகவும் இருக்கிறது. ஆகையினால் இன்று பொதுநிலையினரைப்பற்றித் தனியான

ஓர் இறையியலை ஏற்படுத்துவதோ அல்லது திருச்சபையியலுக்குப் பொதுநிலையினரியலைப் பிற்சேர்க்கையாக்குவதோ எமது நோக்கமன்று. ஆனால் வண. பிதா கொங்கர் கூறியதுபோல, முழுத்திருச்சபை அங்கத்தினரைப்பற்றிய ஒரே இயலை (Total ecclesiology) ஏற்படுத்துவதே எமது நோக்கம். இந்த இயல்தான் பொதுநிலையினரையும், குருக்களையும் தற்போதைய நிலையிலிருந்து முற்றாக மாற்றி கிறிஸ்து நிர்ணயித்த உண்மையான நிலைக்கு அவர்களை மீளக் கொணரவல்லதாக இருக்கும்.

பெரும்பான்மையான பொதுநிலையினரே திருச்சபையாக உருவெடுக்க வேண்டும். அவர்கள் திருச்சபையின் குருக்களின் கரிசனையைப் பெறும் அங்கத்தவர்களாக மட்டும் இருக்கலாகாது. ஏனென்றால் குருக்களுடன் சேர்ந்து அவர்களே தாமாக சிந்தித்து, தீர்மானித்து, ஒரே குடும்பமாக செயற்படும் திருச்சபையாக இயங்க வேண்டும், (not merely as object of concern, but as subject)

## 6. பொதுநிலையினரின் அங்கத்துவம்

திருச்சபையில் பொதுநிலையினரின் அங்கத்துவம் (ecclesial member ship ecclesiality) அவர்களுக்கு, திருச்சபையின் ஆசிரியத்தினாலும், சட்டத்தினாலும் விட்டுக்கொடுக்கப்பட்ட இரக்கச்செயலன்று. மாறாக திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனாலும் முழுத்திருச்சபைக்குள்ளும் உலகத்திற்குள்ளும் அடையக்கூடிய, செயற்படுத்தக்கூடிய அனைத்திற்கும் உரிமை ஊற்றாகும். இவ்வங்கத்துவம், உலகம், திருச்சபை என்ற இரு துருவங்களில் (Secular and Ecclesial spheres) வாழப்படவேண்டிய இரு பிரிந்த வாழ்வன்று. மாறாக, உலகத்தினுள்ளே இருந்து உலகத்திற்காகச் (in and for the world) செயற்படும் ஒரே அங்கத்துவமாக இருக்கவேண்டும். இது திருச்சபையின் குருக்கள் பொதுநிலையினருக்குக் கொடுக்கும் இரக்கக் கொடையன்று. மாறாக நற்செய்தி அறிவிப்பவரும் அதை ஏற்றுக்கொள்பவரும், இறைவனிடமிருந்து பெற்றெடுக்கும் பொதுவான பிறப்புரிமையாகும். எனவே பொதுநிலையினர்பற்றியகருத்தைத் தனிமைப்படுத்தி (isolated understanding) ஆராயவோ அல்லது பொதுநிலையினருடைய பிரச்சினைகளை வகுப்பாய்வு செய்யவோ (Compartmental handling) எதிர் வரும் 'ஆயர் மன்றம் 87' முயலாது என நாம் விரும்புகின்றோம். முதிர்ச்சியற்ற எந்தவிதமான தீர்வுகளையோ, மாற்றங்களையோ, நிரந்தரமாக மக்கள்மேல் திணிக்காது, மாற்றமடையும் உலகில், பணிபுரியும் திருச்சபையில் பொதுநிலையினருடைய அங்கத்துவம் என்ன என்பதை நேர்மையான முறையில் வெளிக்கொணர வேண்டும்.

## 7. குருக்களின் அங்கத்துவம்

பொதுநிலையினருடைய அங்கத்துவத்தைத் தேடுவது குருக்களின் அங்கத்துவத்துக்குப் பாதகமாகத் தோன்றினாலும், திருச்சபையில் குருக்களின் சரியான அங்கத்துவம் தெளிவுபடுவதற்கு உதவியாகவும், பயனுள்ள விளைவைத் தரக்கூடியதாகவும் இருக்கும். திருச்சபையின் மத்திய பாகத்திலிருக்கவேண்டிய பொதுநிலையினரும், குருக்களும் சில நூற்றாண்டுகளாக ஒருவரையொருவர் ஒதுக்கியதன் காரணமாக, குருக்கள் பீடத்தின் பின்னும், பொதுநிலையினர் ஆலயத்தின் வெளியிலும் ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டார்கள். குருக்கள் பீடப் பணியாளர்களாகவும், மேடை அதிகாரிகளாகவும், பொதுநிலையினர் கோவிலுக்கு அதாவது திருச்சபைக்கு வெளியே நின்று பங்கில்லாத பார்வையாளராகவும் மாறினார்கள். (இதனால் கோவிலின் மத்திய பாகம் வெற்றிடமாயிற்று.) ஆகையினால் இன்று குருக்களும் பொதுநிலையினரும் திருச்சபையின் மத்திய பாகத்திலிருக்கும் வெற்றிடத்தை நிரப்பவும் தங்கள் உண்மை இடத்தை எடுக்கவும் ஒற்றுமையாகச் செயற்படவும் அழைக்கப்படுகின்றார்கள். பொதுநிலையினரின் பொற்காலத்தில் குருக்களும் தம்முடைய உண்மை இடத்தையும் பணியையும் கண்டடைவார்களாயின். முழுத்திருச்சபையும் மறுமலர்ச்சி பெறும்.

பொதுநிலையினரின் திருச்சபை அங்கத்துவத்தை (ecclesiality of laity) வலியுறுத்துவது திருச்சபை உலக மயமாக்கலுக்கோ (Secularization) அல்லது ஜனநாயகமயமாக்கலுக்கோ (democratization) இட்டுச்செல்லும் என்ற மறைவான பயம் குருக்களுக்கு இருக்கத் தேவையில்லை, குருக்கள் அனைவரும் திருச்சபையிலுள்ள ஆண், பெண் அனைவரையும் அவர்களுக்குரிய இடத்தையும் வல்லமையையும் அடையப் பண்ணுவதில் பெருந்தன்மையாகவும் வீரத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

## 8- பொதுநிலையினரின் வளர்ச்சிப் படிகள்

பொதுநிலையினர் இன்று சென்றுகொண்டிருக்கும் வளர்ச்சிப்பருவம் அவர்களின் அண்மைக்கால வளர்ச்சியில் 4வது படியாகும். இதைத் தொடர்ந்து 5ஆம், 6ஆம் கட்டவளர்ச்சி நிலைகளும் உருவாக்கப்படவிருக்கின்றன. இவ்வளர்ச்சிப்படிகளை அவதானிப்பது வருங்கால வளர்ச்சியின் திசையைக் காட்டும்.

அ) 2ஆம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து வந்த பொது நிலையினர் இயக்கங்கள், பொதுநிலையினர்பற்றிய இறைவல்லுனர்களின்

கருத்துக்கள் (பிரான்சு தேச கொங்கர் அடிகள், பெல்ஜியதேச காடைன் அடிகள் போன்றோர்) ஐரோப்பிய கத்தோலிக்க ஐக்கியங்கள் (Catholic Action), 12ஆம் பத்திநாதர் பாப்பிறையின் கீழ் நடந்தேறிய அகில உலக பொதுநிலையினர் மகாநாடுகள் (Int. Lay Congress) போன்றவை பல நூற்றாண்டு காலமாகத் திருச்சபையில் நிலவி வந்த பொதுநிலையினரைப்பற்றிய மௌனத்தைக் கலைத்து, புதிய விழிப்புணர்வை ஏற்படுத்தின. இந்த 1ஆம் கட்டத்தில், பொதுநிலையினர் நீண்ட தாக்கத்தின் பின் விழித்தெழுந்துள்ளனர். அப்போது குரு ஆட்சியாளர் பொதுநிலையினரில் ஒரு இன்றியமையாத வலக்கரத்தைக் கண்டு அவர்களைத் தங்கள் சார்பாக தங்கள் சொந்தமெனக் கருதிய அப்போஸ்தலிக்க பணியைச் செய்ய அதிகாரம் கொடுத்து அனுப்பினர்.

ஆ) மேற்கூறிய முதற் கட்டத்தைத் தொடர்ந்து வந்த 2ஆம் வத்திக்கான் சங்கம், பொதுநிலையினரின் விழிப்புக் கட்டங்களுள் மிக முக்கியமான கட்டமாக அமைகின்றது. இது இவ்வளர்ச்சியின் 2வது கட்டமாக இருந்ததினால். இரண்டாம் உலக யுத்தத்தின்பின் பிறந்த சகல கிறிஸ்தவ இயக்கங்களும் ஒன்றுகூடும் கட்டமாகவும், ஒரு புதிய புரட்சியின் ஆரம்பமாகவும் அமைந்தது. (Convergence of old movements and beginning new era) 15ஆம் நூற்றாண்டுக்கு முன்பு, பூமியை மையமாகக் கொண்டே சூரியன் சுழலுகின்றது என்ற கண்ணோட்டம் மாற்றப்பட்டு, சூரியனை மையமாகக்கொண்டே பூமி சுழல்கின்றது என்ற கண்ணோட்டம் பிறந்தது. அதேபோல தன்னையே மையமாக வைத்து உலகம் சுழல வேண்டும் என்று எதிர்பார்த்த திருச்சபை, 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஊடாக உலகை மையமாக வைத்து, தானே சுழலவேண்டுமெனக் கற்றுக்கொண்டது. இதே ரீதியில் குருக்களுக்கு மக்கள் பணிபுரியவேண்டுமென்ற நிலை மாறி மக்களுக்கு குருக்கள் பணிபுரியவேண்டுமென்ற உண்மை உணரப்பட்டது. இது ஓர் ஆழமான மாற்றத்தின் கருவாகும். இக்கருவாகிய மாற்றத்தை நாங்கள் தொடர்ந்து வாழ வேண்டுமாயின் வத்திக்கான் சங்கத்தின் கண்ணோட்டத்தையும் மனப்பான்மையையும் தொடர்ந்து வாழ்பவர்களாகவும், எங்களுடைய வாழ்க்கை அமைப்புக்களுடன் ஆழமான தொடர்பை ஏற்படுத்தவும் முயற்சிக்க வேண்டும்.

இ) மூன்றும் கட்ட நிலையில் எங்கள் ஆசிய திருச்சபையைப் போன்ற 3ஆம் உலகத் திருச்சபைகள், செயற்றிறன் மிக்க பாகத்தைக் கொண்டிருக்கின்றன. எமது தலத் திருச்சபைகளின் (local church) அனுபவங்களும் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளும், ஒன்றுக்கொன்று சந்திப்பதால் இந்த 3ஆம் படியை உருவாக்குகின்றன.

இச்சந்திப்புகளின் துன்ப துயரங்கள் ஏமாற்றங்கள் ஏற்படினும், தலத் திருச்சபைகளில் இருந்து பிறக்கும் சிந்தனைகளும் அவற்றின் குரலொலி களும் முழுத்திருச்சபையின் விருத்திக்கு முக்கியமானவை.

ஈ) பொதுநிலையினரின் அண்மைக்கால வளர்ச்சியின் 4வது படி, வரவிருக்கும் 1987 ஆயர் அவையிலே ஆரம்பிக்கப்படும் கட்டமாக இருக்கின்றது. இது சிறப்பான வகையில் நமது கட்டமாக இருக்கின் றது. இக்கட்டத்தில் தென்துருவத்தில் இருக்கும் 3ஆம் உலக நாடு களும், 3ஆம் உலக திருச்சபைகளும், சிறப்பாக 3ஆம் உலக மக்களின் மாபெரும் கண்டமாகிய ஆசியாக் கண்டமும் முக்கிய இடத்தை வகிக் கின்றன. ஏன்? எவ்விதத்தில்? இந்தக்கட்டத்தில்தான் மக்களுக்காக குருக்களினால் இயக்கப்பட்ட திருச்சபை, மக்களின் திருச்சபையாக மாறுகின்றது. (People's church).

திருத்தந்தை அருளப்பர் சின்னப்பரின் கண்ணோட்டத்தின்படி, வர விருக்கும் ஆயர் அவை 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் புரட்சிமுறைகளை எந்த விதத்தில் வருங்காலத்திற் செயற்படுத்தலாம் என்பதை நிர்ண யிக்கும். ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் புரட்சிமுறை எதிலே தங்கியிருக்கின்றது? எமது கண்ணோட்டத்தில் இப்புரட்சி மக்களின் திருச்சபையை உருவாக்குவதிலேயே தங்கியிருக்கிறது.

## 9. மக்கள் திருச்சபை

முதலாவது யெருசலேம் சங்கத்திலே யூத திருச்சபை, யூதரல்லாத வர்களுக்கு திறக்கப்பட்டதுபோல், 2ஆம் வத்திக்கான் சங்கத்தில் ஐரோப்பிய திருச்சபை உலக திருச்சபையாக மாறியது. இன்று நாம் அனுபவிக்கும் நான்காவது வளர்ச்சிக் கட்டத்திலே, திருச்சபைகள் மக்கள் மத்தியிலேயும், அவர்களது மறை, கலாச்சார, சமூக அமைப் புக்களிலேயும் வேரூன்றி, மக்கள் திருச்சபைகளாக மாறத் தொடங்கி யிருக்கின்றன. மக்களின் திருச்சபையில்தான் எல்லா மக்களின் ஆணும் பெண்ணும், வாலிபரும் வயோதிபரும் சொந்த வீட்டுப் பற்றுணர்ச்சி யைப் பெறுவர். இதுதான் சரித்திரத்தில் இறைவனால் நிர்ணயிக்கப் பட்ட படிப்படியான வளர்ச்சியென்றால், இவ்வளர்ச்சியைக் குறைக்க வோ, அன்றேல் தடுக்கவோ, மந்தமான கோட்பாடுகளினால் அல்லது குறிப்பீடத்தினால், (inter dogmatism and catechism) கட்டுப்படுத் தவோ முயலும் எச்சக்தியையும் நாம் எதிர்க்கவேண்டும்.

## மக்களின் திருச்சபையாக உருவாகுதல் என்பதன் அர்த்தம் என்ன ?

இறைவனின் வார்த்தையை எமது சூழலிற் கேட்டு அதே சூழலில் பதில் கொடுக்கும்போதுதான் மக்களின் திருச்சபை உருவாகின்றது. மக்களின் திருச்சபையாகுதல் என்பது மக்களுக்காக திருநிலைப்படுத்தப் பட்டோர் நடாத்தும் திருச்சபையன்று. மாறுக, மக்களாலே குருக்க ளின் சேவையுடன் மக்களுக்காக நடாத்தப்படும் திருச்சபை. சுருங்கக் கூறின், மக்களின் திருச்சபை என்றுல் எமது திருச்சபைகளில் பொது நிலையினரின் தற்போதைய நிலையை மறுசீரமைப்பது மட்டுமன்று, அவர்களினூடாக அவர்களிலிருந்து திருச்சபையை உருவாக்குவது மாகும்.

ஓர் இடத்திற்கு அல்லது மொழிக்கு அல்லது கலாச்சாரத்திற்கு உகந்த உருவத்தை ஏற்படுத்துவது மாத்திரமன்று; மக்களும் மக்கள் தலைவர்களும், தங்களைச் சூழ்ந்த வாழ்க்கை அம்சங்களும் நற்செய்தியின் ஒளியிலே பரிசிலனை செய்து. ஆழமான சிந்தனையின் பின், இறைவழி பாட்டில் தமது பதிலை அளிப்பதுமாகும்.

இவை எல்லாவற்றையும் நடாத்தி முடிப்பதற்கு 2ஆம்வத்திக்கான் சங்கத்தின் ஏடுகள் ஆகிய 'மகா திட்டமும்' (Magna Carta) இன்றி யமையாததாகும். இதுவே 83ஆம் ஆண்டின் விசேட ஆயர் அவைச் செய்தி. ''சங்க ஏடுகள்தான் நிகழ்காலத்தினதும், வருங்காலத்தினதும் மகா திட்டம். எனவே, அச்சங்கம் ஆரம்பித்த வேலையையும், செய்தி யையும் வளர்த்து முன்னேறுவோமாக.'' *(அருள் சின்னப்பர்)*

ஆகையினுல், எம்மிடமிருந்து அவசியமாகக் கோரப்படுவதும் சிறப் பாக தலைமைப்பீடத்திலிருந்து கோரப்படுவதும் என்னவென்றுல், வத் திக்கான் சங்கத்தின் திருச்சபையியலுக்கு நம் மனதை உண்மையாக மாற்றிக்கொள்வதும், அதன் ஆவியின் கண்ணேட்டத்தை நிறைவாக ஏற்றுக் கொள்வதுமாகும். (conversion to the Spiritl and eccl esiology of Vat. II)

## 10. உலகத்தின் தன்மையை உள்ளபடிஏற்றுக்கொள்ளல்

2ஆம் வத்திக்கான் சங்கம் நடந்து 20 ஆண்டுகள் சென்றபோதி லும், அதனுடைய செய்தியும், அது ஆரம்பித்த பணியும் முழுமையாக இன்னும் தலைவர்களாற்கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. அதன் கண்ணேட்டத்தை சகிப்புத் தன்மையுடன்

அல்லது சாத்வீகத் தன்மையுடன் ஏற்றுக் கொள்ளுதல் போதாது. எனவே செயற்றிட்டனுடனும் உணர்ச்சி ஆர்வத்துடனும் சங்கத்தின் செய்தியை ஏற்றுக்கொள்வது இன்றியமையாதது. அச்சங்கமானது எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவான தீர்வைக் கொடுத்துவிட்டது என்று நினைத்து சங்கம் ஆரம்பித்த வளர்ச்சியை நிறுத்துவதும், அதே கண்ணோட்டத்துடன் சட்டங்களையும், குறிப்பிடங்களையும் ஏற்படுத்துவதும் உதவமுடியாது, அத்துடன் ஆபத்தானதும்கூட.

இன்னும் சில ஆண்டுகளில் 3வது ஆயிரமாண்டுகளை ஆரம்பிக்க விருக்கின்றோம். அதற்குள்ளேயே திருச்சபையை முன்னேற்றத்துடன் கொண்டு செல்ல இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த அருளாகிய 2ஆம் வத்திக்கான் சங்கத்தை நாமெல்லோரும் முன்னேற்றமாகவும், முழுமையாகவும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று திருச்சபை விரும்புகின்றது. ஏனெனில் இச்சங்கம் ஓர் ஆரம்ப அருள், திருச்சபை காட்டும் அருள், ஏவுதல் சக்தியாகும். உலகத்தையும் அதன் மக்களையும், அதற்குள்ளே செயற்படும் திருச்சபையையும், உகந்த முறையில் கிறிஸ்தவர்களாகிய நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அனைத்து மனிதரின் இரட்சிப்பிலும் கரிசனை கொண்டவர்களாக இருப்பதிலேதான் சங்கத்தின் ஏவுதலும், கண்ணோட்டமும் தங்கியுள்ளன. மனிதனை ஆன்மாவென்றும், உடலென்றும் பிரிக்காது, உலகத்தையும், திருச்சபையையும் இருவேறு துருவங்களாகப் பிரிக்காது, இறைவனின் ஒரே துருவத்தினுள் இருந்து செயற்படும் ஒரே திருச்சபையையும் முழு மனிதனுக்கும் எல்லா மனிதருக்கும் இரட்சணியம் தேடுவதே அதன் நோக்கமென்றும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

உலகத்தைப்பற்றி, உள்ளதை உள்ளவாறே உற்றுநோக்கும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கண்ணோட்டத்தைத் தப்பாகக் கணக்கிட்டு, உலகோடு ஒத்தோடுதலாகவோ, சமய சார்பற்ற உலகத்துவமாகவோ (Existentialism and Secularism) சந்தேகிப்பதும் பழிசுமத்துவதும் தவறு. ஆகையினால், பொதுநிலையினரின் திருச்சபை அங்கத்துவத்தையும் அவர்களின் உலக அங்கத்துவத்தையும் விளங்கிக்கொள்வதற்கு 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபையியலையும் அதன் கண்ணோட்டத்தையும். முழுமையாகவும், முன்னேற்றமாகவும் ஏற்றுக் கொள்ளுதல் மிகவும் அவசியம்.

## 11. பொதுநிலையினரின் உலக அங்கத்துவ வல்லமையும், திருச்சபை அங்கத்துவ வல்லமையும்

மேற் கூறப்பட்ட 2ஆம் வத்திக்கான் சங்க கண்ணோட்டத்திலும் படிப்பினையிலும் பொதுநிலையினர் எவ்வாறு உலகிலும், திருச்சபையிலும் தமது அங்கத்துவத்தை வகிக்கின்றனரென்பதும், அவ்வங்கத்துவங்களின் வல்லமைகள் எவை என்பதும் தெளிவாகின்றன.

அ) சுதந்திரப் புதல்வர்கள் :

உலகத்தினுள் அதன் இரட்சணியத்தின் மறைபொருளாகவும், ஆவியின் கொடைகள் நிரம்பிய அங்கத்தவர்களின் குழுவாகவும் இருக்கும் திருச்சபையில், பொதுநிலையினர் ஒவ்வொருவரும் கிறிஸ்துவிலே புதிய மானிடத்திற்கென விடுதலை செய்யப்பட்ட வாரிசுகளாக இருக்கின்றனர். "இறைவனின் பிள்ளைகளுக்குரிய மேன்மையும், சுதந்திரமுமே இம்மக்களின் சொத்து" (தி. 9). இதை எவ்விதத்திலும், எந்த அமைப்பும் மறுத்தலாகாது. பொதுநிலையினர் சுதந்திரத்தோடு செயல்புரிய வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும்.

ஆ) உரிமையுள்ள பிரசைகள் :

மக்களின் திருச்சபைக்குள்ளே இருக்கும் ஒவ்வோர் ஆணும், பெண்ணும் முதிர்ச்சியடைந்தவர்களாகவும், உரிமை, தத்துவம், இடம் என்பவற்றைப் பெற்றுள்ள அங்கத்தவர்களாகவும் இருக்கவேண்டும். 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் முன்பு திருச்சபை கூடுதலாகக் கிறிஸ்துவின் மறை உடலாக விளக்கப்பட்டது. ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபை என்றால் புதிய இறைமக்கள் என்ற கருத்தை விளக்க முன் வந்தது. ஆகையினால், அங்கத்தவர்களின் ஆளுமை, தனித்தன்மை, சுயநிர்ணய உரிமை போன்ற அங்கத்துவ பெறுமதிகள் வத்திக்கான் சங்கத்திலே வலியுறுத்தப்பட்டன. ஆகையினால் பொதுநிலையினர் மேய்ப்பரின் கரிசனையையும், கண்காணிப்பையும் பெற்றுநிற்கும் வெறும் பாத்திரங்களல்லர். ஆனால் சிந்தித்து செயற்படும் வல்லமையுள்ள பொறுப்புள்ள அங்கத்தவர்களாவர்.

இ) நல்ல கிறிஸ்தவன் ஒரு நல்ல பிரசை :

உலகத்திற்குள்ளேயிருந்து உலகத்திற்காகச் செயற்படும் திருச்சபையிலே பொதுநிலையினரின் அங்கத்துவத்தை, திருச்சபை அங்கத்துவம், உலக அங்கத்துவம் என்ற இரண்டு வேறுபட்ட கோணங்களிற் பிரிப்பது சரியன்று. இவ்விரண்டு அங்கத்துவங்களும் ஒன்றோடொன்று தங்கியுள்

ளதாகவும், ஒன்றையொன்று நிர்ணயிப்பதாகவும் கருதப்படவேண்டும். அதாவது எவ்வளவிற்குப் பொதுநிலையினர் கிறிஸ்தவராக (திருச்சபை அங்கத்தவர்களாக) இயங்குகின்றார்களோ அவ்வளவிற்குத்தான் அவர்கள் நல்ல பிரசைகளாக (உலக அங்கத்தவர்களாக) இருக்க முடியும். எவ்வளவிற்கு பொதுநிலையினர் உலக பிரசைகளாக இயங்குகிறார்களோ, அவ்வளவிற்குத்தான் நல்ல கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்.

ஈ) பொதுக் குருத்துவம் வாழ்வின் குருத்துவம் :

கிறிஸ்துவைப்போல் மூவித இரட்சணிய பணித்தன்மை (triple messianic character) கொண்ட திருச்சபையிலே. பொதுநிலையினர் ஒவ்வொருவரும் அரச, குருத்துவ, தீர்க்கதரிசன தன்மைகளைக் கொண்டிருக்கின்றனர். அதற்குரிய கடமைகளில் ஆர்வத்துடனும், உரிமையுடனும் அவர்கள் செயற்படவேண்டியவர்கள்.

திருமுழுக்கின் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அளிக்கப்பட்ட அரச, குருத்துவ, தீர்க்கதரிசனப் பணிகள், வெறும் தலைப்புக்களாகவோ குஞ்சங்களாகவோ இருக்காது, வாழ்வில் செயற்படும், செயற்படுத்தப்படும் பணிகளாக வளர்க்கப்படவேண்டும். இங்கு பொதுக் குருத்துவத்துக்கும், பணிக் குருத்துவத்திற்கும் (Common Priesthood and Ministerial Priesthood) வேறுபாடு இருக்கிறது. ஆனல், அந்த வேறுபாட்டை ஆழமாகத் தோண்டிக் காட்டுவதிலோ, ஒன்றைத் தாழ்த்தி மற்றையதை உயர்த்துவதிலோ நில்லாது, இரண்டு குருத்துவங்களும் என்ன உட்கருத்தைக் கொண்டுள்ளனவென்பதையும், அவைகளிரண்டிற்குமிடையிலிருக்கும் ஒற்றுமை யாவை என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

பொதுக் குருத்துவம் போலியானதன்று. மாறாக உண்மையானதும், வாழ்க்கை சம்பந்தமானதுமாகும். இக்குருத்துவத்தின் வழியாக சரித்திரத்தில் எல்லோருக்காகவும் ஒருமுறை மாத்திரமே ஒப்புக்கொடுக்கப்பட்ட பலி, நாளாந்த வாழ்வில் வாழப்படுகிறது. (living priesthood) வாழ்விற் சிலுவைப்பலியைச் சீவிப்பது பொதுநிலையினருக்கு மாத்திரமன்று, குருக்களுக்கும் கடமையாக அமைகின்றது. பொதுக் குருத்துவத்தின் அமைப்பிற்குள்ளேதான், பணிக்குருத்துவத்தை விளங்கிக்கொள்ளவேண்டும். பணிக்குருத்துவம் நடாத்தும் பலி, கல்வாரிப் பலியைத் திருவருட்சாதன உருவத்தில், திருச்சபைப் பலனுடன் நினைவு கூரும் பலியாகும். ஆகையினல், இப்பலியை ஒப்புக்கொடுப்பதற்கும், பங்கெடுப்பதற்கும், அதன் உண்மையான கருத்தையும், செல்வத்தையும் பெறுவதற்கும் ஒரு நிபந்தனையுண்டு. வாழ்க்கையிலே அப்பலி

நடைபெற வேண்டும்'' இல்லாவிட்டால் பொதுக்குருத்துவத்தைத் தவிர்த்துப் பணிக்குருத்துவம் ஒரு தனியான, தெளிவான கருத்தைப் பெற்றுவிடும்.

பொதுநிலையினரும், குருக்களும் தங்களது குருத்துவத்தின் வழியாக முதலில், அறையுண்ட கிறிஸ்துவின் சீடர்களாக வாழ்க்கையில் தம்மைக் காண்பித்து பின்புதான், தலையான கிறிஸ்துவின் உருவங்களாக முன் வரவேண்டும். சுருங்கக்கூறின் குருக்கள் தமது பணிக் குருத்துவத்தின் உண்மைப் பொருளையும், அதை நடைமுறையிற் கடைப் பிடிக்கும் வழிகளையும் இந்தக் கோணத்தில் புதுப்பிக்கவேண்டும். அப் போதுதான் பொதுக் குருத்துவமும் மக்கள் மத்தியிலே செயற்றிறன் வாய்ந்ததாக இருக்கும். பணிக்குருத்துவமும், பலிசெலுத்தும் அதிகாரப் பூசாரியாக இராது, கிறிஸ்து விரும்பிய சேவைக் குருத்துவமாக இருக்கும்.

## 12. பொதுநிலையினரின் இறைவாக்குரைத்தற் பணி

உண்மை மனிதனை இரட்சிக்கும். இரட்சிக்கும் உண்மையை உரைப்பதும், சான்று பகருவதும் இறைவாக்குப் பணியாகும். கிறிஸ்து தமது இரட்சணிய பணியை இறைவாக்கினர் உருவத்திலும் செய்தார். ஆகையால் இறைவாக்குரைத்தற் பணிமூலம் திருச்சபை தனது இரட்சணிய பணியைச் செய்கிறது. இதற்குப் பொதுநிலையினருட் பொதிந்து கிடக்கும் இறைவாக்குரைத்தல் வல்லமை (prophetic potential) திருச்சபைக்குள்ளும், திருச்சபைக்கு வெளியிலும் செயற்படுத்தப்பட வேண்டும். எங்களிற் பல குருக்கள் பொதுநிலையினருக்குரியதான இறைவாக் குரைத்திடும் தன்மையை மறுப்பதுபோலவோ மறைப்பது போலவோ தோன்றுகின்றது. இன்னும் சிலர் அப்பணியை திருச்சபைக்கு உள்ளே அன்று, அதற்கு வெளியே மட்டும் சகிப்புத்தன்மையுடன் ஏற்பது போலத் தோன்றுகின்றது. ஆனால், உண்மையில், பொதுநிலையினர் இறைவாக்குரைத்தற் பணியை, உலகத்தினுள் உலகைச் சார்ந்தவைகளில் மாத்திரமன்று, திருச்சபைக்குள்ளும் திருச்சபை சார்ந்தவற்றிலும் செய்ய வல்லமையும், கொடைகளும் பெற்றிருக்கின்றனர்.

பொதுநிலையினரின் இறைவாக்குரைத்தற் பணி அவர்களுக்கு திருச்சபையின் ஆசிரியத்துவத்தினுற் படிப்பிப்பதையும் கட்டளையிடப் படுவதையும், மௌன அமைச்சலுடன் ஏற்றுக்கொள்வதில் தங்கியிருப் பதன்று. ஆனுல், இரட்சணிய உண்மைகளுக்குத் திருச்சபைக்குள் ளேயே விழிப்பாகவிருந்து, பேச்சுத் துணிச்சலுடனும் ஆற்றல் வீரத்து டனும் சான்று பகர்வதிலேயே தங்கியிருக்கின்றது. இரட்சணிய உண்

மைகள், திருச்சபையில், அதன் ஆசிரியத்துவத்தின் அல்லது திருத்தந்தையின் தனிச் சொத்தன்று, முழுத் திருச்சபையும் இந்த இரட்சணிய உண்மைக்கு உரிமையுடையதாக இருக்கின்றது. முழுத்திருச்சபையும் அப்போஸ்தலிக்க மரபைத் தொடர்ந்து வருவதால், இரட்சணிய உண்மைகளைப் பொறுத்த மட்டில் வழுவாவரத்தைப் பெற்றிருக்கின்றது. இவ்வரத்தில் ஆசிரியத்துவத்துக்கு ஒரு சிறப்பான பொறுப்பும், அதிகாரமும் இருப்பது போல், பொதுநிலையினருக்கும் பொறுப்பும் பணியும் இருக்கின்றன. ஆகையினால் இரட்சணிய உண்மைகள் பகிரங்கமாகக் கற்பிக்கப்படுவதற்கு முன்பதாக, பொதுநிலையினருள் ஆவியின் சக்தியாற் பொதிந்திருக்கும் உண்மையை அறிய அவர்களின் ஆலோசனை தேடப்படவேண்டும். கற்பிக்கும் திருச்சபைக்கும், கற்பிக்கப்படும் திருச்சபைக்கும் (teaching church and learning church) இடையிலிருக்கும் இடைவெளி குறைக்கப்பட்டு, இருபகுதியினரும் ஆவியினாலே கற்பிக்கப்படும் திருச்சபையாக உருவெடுக்கவேண்டும். இன்றைய உலகில், திருச்சபையானது தனது தீர்க்கதரிசன பிரசன்னத்தையும், பணியையும் (prophetic presence and service) செய்ய வேண்டுமாகில், பொதுநிலையினர் சுதந்திரமாக இறைவாக்குரைக்கும் பணியில் ஈடுபட உற்சாகமளிக்கப்படவேண்டும்.

## 13. பொதுநிலையினரின் அரச பணி

பொதுநிலையினரின் அரச கருமத்தைப்பற்றிய போதிய விளக்கங்கள் பொதுவாகச் சொல்லப்படுவது அரிது. திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய அரச தன்மை, ஆளும் சக்தியிலும், வழிகாட்டும் சக்தியிலும் தங்கியிருக்கின்றது என்று இலகுவாக விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இது சரியன்று. இறை மக்களின் அரசகுல அழைப்பு புதிதாக இரட்சணிய வரலாற்றின் பின்னணியில் விளங்கப்படவேண்டும். கிறிஸ்தவ இரட்சணியம், இறையரசைத் தேடுவதிலேயும், ஆரம்பமாக அதைக் கட்டியெழுப்புவதிலேயும் அடங்கியிருக்கின்றது. (In searching and becoming the kingdom) கடவுளின் அரசை முன்னிட்டு, அதன் ஆயத்தத்திற்காகச் செய்யப்படும் உலக கருமங்களை திருச்சபையில்ஆற்றப்படும் வழிபாடுகள், மறைப்பணி போன்றவற்றோடு ஒப்பிட்டு, முக்கியத்துவத்திற் குறைந்ததாக தள்ளிவைப்பது தவறு. வரவிருக்கும் இறையரசிற்கு தற்போதைய துறவற வாழ்வு முன்னடையாளமாக இருப்பதுபோல, உலகத்தினுள்ளே கிறிஸ்தவ இரட்சணியம் இருந்து செயற்படுகின்றது என்பதற்குப் பொதுநிலையினரின் கிறிஸ்தவ பிரசன்னம் அடையாளமாக இருக்கின்றது.

## 14. பொதுநிலையினரின் அருங்கொடைகள்

(Lay charisms)

அருங்கொடைகளும், சேவைகளும் (Charisms, Services) நிறைந்த ஒரு திருச்சபையிற், சேவைசெய்வதற்குப் பொதுநிலையினருக்கு மாபெரும் சக்திகளும், சந்தர்ப்பங்களும் பிறக்கின்றன. கடந்த காலத்தில், அருங்கொடைகள், சேவைகள், திருப்பணிகள் திருநிலைப்படுத்தப்பட்டோரின் (Ordained) தனி உரிமையாகக் கருதப்பட்டன. ஆனால், 2ஆம் வத்திக்கான் சங்கம் வேதாகம ஒளியிலும் வரலாற்று வளர்ச்சியிலும், மேய்ப்புப்பணி அவசியங்களின் பின்னணியிலும் நடாத்திய தேடுதலில், பணிகளும் சேவைகளும் பல்வேறுபடுத்தப்பட்டு பலவிதத்திலும் பொதுநிலையினர்களுடனும் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டுமென்று ஊக்குவிக்கின்றது. ஆனால் பாரம்பரியத்தில் குருக்கள் அனுபவித்த தனித்தன்மைக்கும், பாதுகாப்பிற்கும் (Identity & Security) பல்வேறுபடுத்தப்பட்ட பணியினால் பங்கம் ஏற்படுமோ என்ற பயம் இம்மாற்றத்தை ஏற்பதற்குத் தடையாக இருக்கின்றது.

2ஆம் வத்திக்கான் சங்கம் திருச்சபையின் தலைவர்கள் மக்கள் மத்தியிலே தோன்றும் அருங்கொடைகளை நசுக்காது, வரவேற்று ஊக்குவிக்கவேண்டுமென்று எச்சரிக்கின்றது. (திருச்சபை 12) ஆகையினால், திருச்சபைக்குள்ளே திருச்சபையின் பல்வேறு பணிகளையும், பலவித பணியாட்களையும்பற்றி மீளவும் சிந்திப்பது இன்றியமையாதது. திருச்சபைக்குள்ளே பணியாளர்களின் பற்றாக்குறையைப் பற்றியோ, ஏற்படும் இன்னல்களைப்பற்றியோ, பேசுவது ஆரம்ப திருச்சபையின் அனுபவத்திற்கு ஒவ்வாததாகும். தேவைக்கேற்ப புதிய பணியாளர்களை தெரிவதிலும் (அ. ந. 6, 1–6) பணியாளர்களை பகிர்வதிலும் (அ. ந. 13, 1–3) தயங்கவில்லை. பணிகளைப் பொறுத்தமட்டில், குறைகளோ, குற்றங்களோ இன்றி இருக்குமாகில் அதற்குக் காரணம் அருங்கொடைகளின் ஊற்றாகிய ஆண்டவர் எம்மைக் கைவிட்டுவிட்டார் என்பதன்று; மாறாக, நாம் அருங்கொடைகளைக் கண்டறிவதிலும், இனம் காண்பதிலும், கையாள்வதிலும் பொறுப்பற்ற, முதிர்ச்சியற்ற முறைகளைக் கடைப்பிடிக்கின்றோம் என்பதுதான்.

## 15. பொதுநிலையினரை மீளவும் திருச்சபையில் புனரமைத்தல் (Rehabilitating the Laity)

திருஆட்சி அமைப்பாக மாத்திரம் இயங்கும் திருச்சபையியலில் (Hierachiology) பொதுநிலையினரைப் புனரமைப்பது முடியாததொன்றாகும். ஆனால் திருஆட்சித்தன்மையுடன் குழுவாக இயங்கும் திருச்

சபையியல் (Hierarchical communion) பொதுநிலையினரைச்சீரமைத்து, புனரமைக்க முடியும். 2ஆம் வத்திக்கான் சங்கம் திரு ஆட்சி அமைப்பான திருச்சபைக்கும், குழு அமைப்பான திருச்சபைக்கும் இடையிலேயுள்ள எதிர்ப்புக்களையும் தாக்கங்களையும் குறைப்பதற்குத் "திரு ஆட்சித்தன்மை கொண்ட குழுவே திருச்சபை" என்று வர்ணித்து, இதற்காக முழுத்திருச்சபையிலேயும், சிறப்பாக ஆயர்களுக்கிடையிலும், கட்டமைப்புத் தத்துவத்தை (Principal of Collegiality) ஊக்குவித்தது. 2ஆம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து வளரும் திருச்சபை இத்தத்துவத்தைத் திருச்சபை முழுவதிலேயும் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு தத்துவமாகக் கண்டுணர்கின்றது. கூட்டுவாழ்வு (Communion) விசுவாசிகள் மத்தியிலே இருக்கும் கொடைகளை ஏற்றுப் பயன்படுத்த வேண்டுகிறது. திரு ஆட்சித்தன்மை (Hierarchy) அக்கொடைகளைப் பொறுத்த மட்டில் மேய்ப்புப்பணியின் அதிகார தேவையை வேண்டுகின்றது. ஆகையினால், பொதுநிலையினரும், குருக்களும் திருச்சபையில் சீராகப் புனரமைக்கப்பட வேண்டுமாயின், திருச்சபை ஒரு திருஆட்சித்தன்மை கொண்ட குழுவென்று சகலராலும் உணரப்பட வேண்டும். அத்தோடு எல்லாருடைய கொடைகளையும் ஏற்று, ஒழுங்குபடுத்த வேண்டும்.

இன்றைக்கு ஆயர்கள் மத்தியில் சந்தோஷத்திற்குரிய கூட்டுணர்வு (Consiciousness of Collegiality) வளர்ந்துகொண்டு வருகின்றது. ஆயர்களின் திருநிலைப்படுத்தல்கள், ஆயர் அவைகள், ஒன்றியங்கள், சங்கங்கள் என்பன இவ்வுணர்வின் அறிகுறிகளாகும். இப்படியான ஒன்றுகூடல்களை சிலர் தடைசெய்ய முயற்சிக்கின்றபோதிலும், அவைகள் திருச்சபையின் வாழ்வில் மாநிலரீதியில் ஒரு புதிய பங்கேற்றலை ஊக்குவிக்கின்றன. இதேபோல் பொதுநிலையினர் மத்தியிலும் அவர்களுடைய குருக்களுக்கிடையில் ஒரு கூட்டுணர்வு வளர்வது இன்றியமையாதது. பங்குச்சபைகளும், மறைவட்ட சபைகளும் மற்றும் உள்ளூர் ஒன்றியங்களும் கூட்டு வாழ்வையும், குழுவாழ்வையும் கூடுதலாக வாழ வேண்டும். ஆனால், இக்கட்டமைப்புகளுக்கு எவ்வளவுதூரம் சுதந்திரமும், பொறுப்பும், நம்பிக்கையும் வழங்கப்படுகின்றது? எமது சொற்களுக்கு ஏற்றபடி எமது செயல்கள் அமைந்திருக்கின்றனவா ?

ஆயர்களும், குருக்களும் தங்களுடைய மேலதிகாரிகளிடமிருந்து தாங்கள் கோரும் கூட்டுவாழ்வு உரிமையையும், பகிர்ந்து ஆளும் தன்மையையும் (Collegiality and Supsidiarity) முதலில் தங்களுடன் சேர்ந்து செயற்படும் பொதுநிலையினருக்கு அளிக்கவேண்டும். கூடிவாழ்வதையும், பகிர்ந்து ஆளுவதையும் மேலிருந்து வரும் சட்டங்களினாலோ,

ஏடுகளினூலோ அடைய முடியாது. ஆனால், முதலில் வாழ்க்கையில் வாழப்பட்டு, அதன்பின் படிப்பினையாகக் கற்பிக்கப்பட வேண்டும். (Articulated from Praxis to doxis)

மேற்கூறியதிலிருந்து பொதுநிலையினரின் வரைவிலக்கணத்தில் இருக்கவேண்டிய முக்கிய அம்சங்களைச் சுருக்கி இவ்வாறு கூறலாம்.

"பொதுநிலையினன் ஒருவன் திருச்சபையில் ஒரு முழுமை வாய்ந்த அங்கத்தவன். எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும் குறைந்தவனாக அவனைக் கருதமுடியாது. அவன் கிறிஸ்துவின் உண்மை ஆவியால் நிரப்பப்பட்டவனும், இறை மக்களுக்குரிய இழக்கமுடியாத சுதந்திரத்தையும், மாண்பையும் கொண்டவனுமாவான். இவன் தெய்வீக ஞானத்தையும். முதிர்ச்சியையும் பெற்றவன். (இறையியற் கல்வி பெற்றவன் என்பதன்று). திருச்சபையின் வாழ்விலும், உலக வாழ்விலும் சட்டரீதியான ஆள்தன்மையையும், உண்மையான பிரசையின் உரிமையையும் கொண்டுள்ளவன். இவனுடைய திருச்சபை அங்கத்துவ வல்மையையும், உலக அங்கத்துவ வல்லமையையும், இறைவனையும் அவருடைய இராச்சியத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. ஆகையினால் அருங்கொடைகளாலும், ஆவியின் கனிகளாலும் பலப்படுத்தப்பட்ட இவனது மூவித இரட்சணியப் பணியானது, அவன் தனதுபொதுக் குருத்துவத்தை வாழுவதற்கும், தீர்க்கதரிசன வழியில் இறை அரசின் மதிப்பீடுகளுக்கு சாட்சியம் பகருவதற்கும், இறை சித்தத்தைக் கொண்ட ஏனைய மக்களோடு சேர்ந்து இறை அரசைக் கட்டி எழுப்புவதற்கும் அவனைச் சக்தியுள்ளவனாக்குகின்றது.

## 16. பொதுநிலையினரின் ஆன்மீகமும், அப்போஸ்தலத்துவமும்

பொதுநிலையினர் தமது ஆன்மீகத்திலும், அப்போஸ்தலத்துவத்திலும்தான், தமது அழைத்தலையும், பணியையும் உண்மைப்படுத்துவர். இதுவே அவர்களுடைய திருச்சபை அங்கத்துவ வல்லமையையும், உலக அங்கத்துவ வல்லமையையும் பரீட்சிக்கும் காரணியாக அமையும். இந்த இரண்டு அங்கத்துவ வல்லமையையும் பிரித்துப்பார்ப்பது தவறு. அதேபோல், ஆன்மீகத்தைத் திருச்சபையோடு சேர்ந்ததாகவும், அப்போஸ்தலத்துவத்தை உலகத்தோடு சேர்ந்ததாகவும் கூறுபடுத்துவது 2ஆம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னிருந்த தவறான நிலைக்கு இட்டுச்

செல்வதாக அமையும். எங்களுடைய கிறிஸ்தவ சீடத்துவத்தைத் திருச்சபைக்குள்ளேயும், வாழ்வை உலகத்திற்குள்ளேயும் தேடுவது தவறு. ஆன்மீகமும் அப்போஸ்தலத்துவமும் கிறிஸ்தவ வாழ்வின் வேறுபட்ட பகுதிகள் அல்ல, மாறாக அவை இரண்டும் சேர்ந்தே கிறிஸ்தவவாழ்வை அமைக்கின்றன.

## 17. ஆன்மீகம்

2ஆம் வத்திக்கான் சங்கம் எங்கள் எல்லோரையும் பரிசுத்த தனத்திற்கு அழைக்கின்றது. (திருச்சபை 5) இப்பேர்ப்பட்ட அழைத்தல் வழியாக, புனித வாழ்வானது வழமையான துறவற, குருத்துவ மதில்களைத் தாண்டி அப்பாற் செல்லுகின்றது. இவ்வழைத்தல் பரிசுத்த தனத்தின் உள்ளார்ந்த இயல்பை மேம்படுத்துவதோடு, எல்லார்க்கும் எட்டியதாகவும், உலகத்தைவிட்டு ஓடாது உலகிலிருந்து கொண்டே எல்லோராலும் வாழப்படக்கூடியதாகவும் செய்கின்றது. ஆன்மீகத்தை, பக்தி முயற்சிகள், அருட்சாதன பங்கெடுப்புகள், கட்டளைகள், கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தல் போன்றவற்றுள்மட்டும் அடக்கிவிட முடியாது. இவைகள் ஆன்மீக வாழ்விற்கு ஊட்டமளிக்கின்றன. ஆனல் ஆன்மீக வாழ்வாக இவற்றைக் கருதமுடியாது. ஆன்மீக வாழ்வென்றால், பல்வேறுபட்ட சூழ்நிலைகளிடையே மனிதன் இறைவனேடும், அயலவரோடும் ஏற்படுத்தும் ஒரு சரியான வாழ்க்கைத் தொடர்பு, ஒரு சரியான வாழ்க்கைக் கண்ணேட்டம், ஒரு சரியான ஒற்றுமையாகும் பொதுநிலையினர் உலகத்துடன் உறவாடும் (Spirtuality of dialogue with the world) ஓர் உண்மையான ஆன்மீகத்தை வாழ திருச்சபை உற்சாகமூட்டுகின்றது. அத்துடன் துறவற, குருத்துவ ஆன்மீகத்தை அல்லது அதன் உருவங்களைக் கிளிப்பிள்ளைபோற் பின்பற்றி உலகில் வாழுதல், ஊக்குவித்தல் சரியல்ல. கிறிஸ்தவ சீடத்துவம் பங்குக்குருவின் உருவத்திலே மாத்திரம் உணரப்படக்கூடாது, பங்குக்குருவின் வாழ்வு கிறிஸ்தவர்கள் மத்தியிலே பலவித கிறிஸ்தவ சீடத்துவ உருவத்திற்கு மக்கள் ஆர்வத்தைத் தூண்டும் வாழ்வாக அமையவேண்டும். ஆனல் குருக்கள் பொதுநிலையினருக்கென ஓர் ஆன்மீகத்தைச் சித்தரித்துக்காட்ட முடியாது. பொதுநிலையினர் தமது உண்மையான ஆன்மீகத்தைத் தேடிக் கண்டுணரத் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும். உலகியல்சார்ந்த ஆன்மீகம் (secular spirtuality) தெய்வீக மறை பொருளுக்கும், உலக வாழ்வுக்குமிடையிலே நடைபெறும் ஓர் உரையாடல்—ஆன்மீகமாகும்.

## 18. அப்போஸ்தலத்துவம்

பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவமானது முழுத்திருச்சபை யின் அப்போஸ்தலத்துவத்தில் பங்கெடுத்தலாகும். கடந்தகாலத்தில், இது திரு ஆட்சியாளர்களின் மூலமாக, அவர்களின் விருப்பப்படியும் சொற்படியும் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகவும், திருஆட்சி அமைப்பாள ரின் அப்போஸ்தலத்துவத்தின் ஒரு பங்கெடுத்தலாகவும் கருதப்பட்டது. இது தவறு. எவ்விதம் திருஆட்சி அமைப்பாளர்கள் தமது அப்போஸ் தலத்துவத்திற்கு அடிப்படை அழைத்தல்களைப் பெறுகிறார்களோ, அதே விதமாகப் பொதுநிலையினரும் தமது அப்போஸ்தலத்துவத்திற்கு அடிப் படை அழைத்தல்களைப் பெறுகிறார்கள் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கற்பிக்கிறது. (தி. 33) ஆகையினால், பொதுநிலையினரின் அப் போஸ்ததத்துவத்தின் உள்ளடக்கம், உருவம், வழிமுறைகள் அனைத்தும் மீளவும் ஆராயப்பட்டுப் புதுப்பிக்கப்படவேண்டும்.

பொதுநிலையினர் முழுத்திருச்சபையின் பணியிலும் தமதுகிறிஸ்தவ அங்கத்துவ வல்லமையாற் பங்கு பெறுகின்றனர். இந்த அப்போஸ்த லத்துவம் திருச்சபையின் வளர்ச்சிக்காக மாத்திரமன்று, அதற்குமேலாக இறையரசின் வருகைக்காக நடைபெறுகிறது. எனவே பொதுநிலையி னர் அப்போஸ்தலத்துவம் இறை அரசின் அப்போஸ்தலத்துவம் என்றால் மிகையாகாது. (Kingdom Apostolate). ஆகவே இக்குறிக்கோளுக் இணங்க திசையும் உள்ளடக்கமும் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதன் திசை இற்றைவரை இருந்ததுபோல் திருச்சபை வளர்ச்சியை மையமாகக்கொண்டு அதனை உள்நோக்கிச் சேவை செய்வதைக் குறைத்து, less church oriented (Centripetal) உலகை மையமாகக் கொண்டு அதற்குள் சேவை செய்யக்கூடியதாக அமைய வேண்டும். (Centrifugal)

அப்போஸ்தலத்துவ உள்ளடக்கமானது அரசியல், பொருளாதார, கலை, கலாச்சார, சமூக வட்டாரங்களிற் பொதுநிலையினரின் கூடிய ஈடுபாட்டையும் தீர்மானிக்கும் வல்லமையையும் கொண்டிருக்கவேண் டும். இவ்வப்போஸ்தலத்துவத்தின் வடிவம், உத்தியோக பூர்வமாக திரு ஆட்சியாளரினால் திணிக்கப்பட்டதாக இராது பொதுநிலையினரின் சக்தியினாலே உருவாக்கப்பட்டதாக இருக்கவேண்டும். குருக்கள், துற விகள் இந்த அப்போஸ்தலத்துவத்தைப் பொறுத்தமட்டில் முழு ஆதிக் கம் செலுத்துபவர்களாக அல்லது சகலத்தையும் ஆரம்பிப்பவர்களாக இருத்தலாகாது. மாறாக, உலக அம்சங்களை நற்செய்தி மயமாக்கும் பொதுநிலையினரின் ஆர்வத்தை இணைத்து ஊட்டம்கொடுக்கும் (anima-

ting) சேவையாளராக இருக்கவேண்டும். பொறுப்புணர்ச்சியுடனும், சுய அதிகாரத்துடனும் பொதுநிலையினர் தமது கவனத்தையும், கரிசனையையும் செலுத்தி உலகத்தில் இறையரசை ஆயத்தம் செய்பவர்களாக செயல்படவேண்டும்.

## 19. பொதுநிலைத் திருப்பணிகள் (Lay ministries)

2ஆம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து வந்த மறைப்பணி அபிவிருத்தியானது, திருச்சபையில் திருப்பணிகளை வேறுபடுத்துவதற்கு ஊக்கம் கொடுக்கின்றது, (தி. 18) பொதுநிலையினரின் திருப்பணிபற்றிய கேள்வி குருத்துவத் திருப்பணியாளரின் குறைவாலோ அல்லது கிறிஸ்தவ சமூகங்களில் கொடைகளினதும், மூலதனங்களினதும் பற்றுக்குறையினாலோ பிறந்த ஒரு கேள்வியன்று. மாறாக, கிறிஸ்தவ சமூகங்களில் பொதிந்து கிடக்கும் பல்வேறு கொடைகளை வரவேற்காததாலும் அவைகளைச் சேவையில் ஈடுபடுத்தாததாலும் தகுந்த முறையில் ஏற்றுக் கொள்ளாததாலும் பிறந்ததொன்றாகும். திருநிலைப்படுத்தப்பட்ட குருக்கள்தான் சகல கொடைகளையும் பெற்ற தனிப்பெரும் பணியாளர்கள், ஏனையோர் கொடைகளைப் பெறாத வெறும் கிறிஸ்தவர்கள் என்ற தப்பபிப்பிராயம் ஏற்படுத்திய கேள்வியாகும்.

பொதுநிலைத் திருப்பணி, பரந்த பொதுநிலை அப்போஸ்தலத்துவத்தின் ஒரு குறிக்கப்பட்ட உருவமாகும். பொதுநிலையினரொருவர் உலகத்தினுள்ளே முழுமையாக இருந்துகொண்டு, தன்னுடைய கிறிஸ்தவ அங்கத்துவ வல்லமையோடும், தராதரத்தோடும், உரிமையோடும், பகிரங்கமாகவும் நிரந்தரமாகவும் குருத்துவ அல்லது தீர்க்கதரிசன அல்லது அரச பணியை ஒரு சமூகத்திற்குச் செய்யும்போது, அது பொதுநிலையினர் திருப்பணியாகும்.

பொதுநிலைத் திருப்பணியாளர்களைக் குருக்கள் தமது தேவைக்கேற்ற வலக்கர நண்பர்களாகவோ அல்லது தமது பணியின் குறையை நிவர்த்திசெய்யும் பொருள்களாகவோ கருதுவது சரியன்று. இப்படியான தவறான கொள்கையின் மத்தியில், பொதுநிலைத் திருப்பணியாளர்களைச் சரியாகச் சேவையில் ஈடுபடுத்துவதும், சேவைக்குரிய ஊதியம் கொடுப்பதும் பிரச்சனைக்குரியனவாக இருக்கின்றன. இறை வார்த்தையைப் போதிப்பவன் அவ்வார்த்தையைப் பெறுவோனிடமிருந்து நீதியான ஊதியம் எதிர்பார்ப்பது நேர்மையானது. ஆனால், இன்றைய திருச்சபையின் தலைமைத்துவம் திருநிலைப்படுத்தப்பட்ட ஆண் பிரமச்

சாரியத்திற்கே உரியதாக இருப்பதன் காரணமாக, ஆண்—பெண் பொதுநிலைத் திருப்பணியாளர்களையும், அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும், அவர்களுடைய குடும்பச் சூழ்நிலைகளையும் விளக்கிக் கொள்வது கடினமாக இருக்கின்றது. அதற்கேற்ப ஊதியம் கொடுப்பதில் திருப்திநிலை இல்லை.

## 20. பொதுநிலைத் திருப்பணியாளர்களை உருவாக்கல்

பொதுநிலைத் திருப்பணிக்கு அழைக்கப்பட்டவர்களும் குருத்துவக் கல்லூரி அல்லது அதுபோன்ற பள்ளிகள்மூலமே உருவாக்கப்படவேண்டுமென்ற சிந்தனை எம்மத்தியில் நிலவுகின்றது. ஆனால், பொதுநிலையினரின் உருவாக்கலில் அப்படி இருக்க முடியாது. கொடைகளின் ஊற்றாகிய ஆவியானவருடன் சேர்ந்து, அழைக்கப்பட்டவர்களில் இருக்கும் கொடைகளை வளர்த்து வளமூட்டி ஒரு தொடர்பான சேவையாக உருவம் கொடுப்பதே உருவாக்கலின் நோக்கமாகும். ஆகையினால் அழைக்கப்பட்டவர் சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டுப் பாதுகாப்பான ஒரு வீட்டில் (Glass house) வைத்துப் பயிற்றுவிக்கப்படல் இவ்வுருவாக்கலின் நோக்கமன்று. ஆனால், சேவையிலீடுபெட்டுக்கொண்டே சேவைக்கேற்றவாறு அனுபவத்திலிருந்து அறிவுக்கும். அறிவிலிருந்து அனுபவத்திற்கும் செல்வதை நோக்கமாகக்கொண்டதாகும். (Praxis→doxis→Praxis) இவ்வுருவாக்கல் குருக்களுக்களிக்கப்படும் உருவாக்கலைக் காலத்திலும், உள்ளடக்கத்திலும் சுருக்கிக் கொடுப்பதன்று. ஆனால், பொதுநிலையினரை பணிவாழ்வு வழியில் விழிப்புணர்வுகொள்ளச் செய்வதும் ஆன்ம திடப்படுத்துதலுமாகும். இத்தகைய உருவாக்கல் தற்போதைய குருத்துவ உருவாக்கலில்கூட வழிவகைகள், உள்ளடக்கம் போன்றவற்றில் நல்ல மாற்றத்தைக் கொண்டுவரும் என்பது எமது நம்பிக்கை.

## 21. எம்மை எதிர்நோக்கும் சவால்கள்

இன்றைய காலகட்டத்தில் எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகள் எமது துன்பத்திற்குக் காரணிகளாயிராது, எமது தற்போதைய நிலையிலிருந்து நாம் வளருவதற்கும் அபிவிருத்தியடைவதற்கும், சவால்களாயிருக்க அவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

**சவால் 1. திருச்சபையின் தீர்மானங்களிற் பொதுநிலையினரின் பங்களிப்பு**

2 ஆம் வத்திக்கான் சங்கமும் அதைத் தொடர்ந்து வந்த ஆசிரிய ஏடுகளும் இதைப்பற்றி மௌனம் சாதிக்கின்றன. ஆனால் பொதுநிலை

யினர் மத்தியில் இஃது அதிருப்தியைக் கூட்டுவதுடன், திருச்சபை தமக்கு விடுக்கும் அழைப்பின் நேர்மைத்தனத்தையும் கேள்விக்குறியுடன் நோக்கச் செய்கின்றது. திருச்சபை ஒரு வெறும் மக்கள் ஆட்சியுமன்று; முடியாட்சியுமன்று; திருச்சபை திருஆட்சி அமைப்பு மாத்திரமுமன்று; ஆனல் தனக்குரிய தனித்துவ திருஆட்சி அமைப்புடைய ஒரு குழுவாகும். இந்தக் குழுவிலே, இறைவனின் சித்தம் சூழ்நிலைக்கேற்ற முறையில் ஆவியின் துணையுடன் குழுவாகத் தேடப்பட்டு, குழுவாகப் பகுத்தறியப்பட வேண்டும்.

ஆகையினல், குழுவாகத் தீர்மானங்களைக் கண்டடைவது இன்று மிக முக்கிய தேவையாக இருக்கின்றது. வத்திக்கான் சங்கம் பொதுநிலையினரைத் திருச்சபையின் வாழ்விலே செயற்பாடு மிக்க பங்கிற்கு அழைத்திருந்தால், அச்சபை வாழ்விலே எடுக்கப்படும் தீர்மானங்களிலே இவர்களும் பங்கெடுப்பது தகுதியும் நீதியுமாகும். உலகம் பொதுநிலையினருக்கும், திருச்சபை குருக்களுக்கும் என்றாற்போல, ''பொதுநிலையினர் உலகத்தைச் சார்ந்தவற்றில் மாத்திரம் தீர்மானங்கள் எடுக்கலாம். ஆனல் திருச்சபைக்குள் குருக்கள் மாத்திரமே தீர்மானம் எடுக்கலாம்'' என்று நாங்கள் கூறினல், 2ஆம் வத்திக்கான் சங்கத்திற்குமுன் நிலவிய பழைய பிளவுபட்ட வாழ்விற்கு வழிவகுப்போம். திருச்சபை எவரின் நலனுக்காக எவரை மையமாகக் கொண்டிருக்கிறதோ, அவருக்கு திருச்சபையின் தீர்மானங்களை எடுப்பதில் கூடிய பங்கெடுப்பு வேண்டும்.

பொதுநிலையினர் திருச்சபையில் சேர்ந்திருப்பதோ, திருச்சபையிடமிருந்து பயன் பெறுதலோ போதாது. ஆனல் அவர்களே திருச்சபையாக உருவாகவேண்டும். அவர்கள் தமது விசுவாச உணர்விற்கும், (Sense of faith) பகுத்தறியும் வல்லமைக்கும் முக்கியத்துவத்தைக் கோருகின்றனர். எனவே பொதுநிலையினருக்குக் குருக்கள் ஒத்துழைப்பின்மை, இருசாராருக்குமிடையில் நிலவும் நம்பிக்கையின்மை, இருசாராரும் தத்துவம் நிறைந்தவராகவும் தத்துவமற்றவராகவும் ஒருவரையொருவர் கணித்தல், இவைபோன்ற பிரச்சினைகளுக்கு வெகுவிரைவிற் பதில் காணப்படவேண்டும். அப்போதுதான் பொதுநிலையினரின் வளர்ச்சி திருச்சபையின் மறுமலர்ச்சியாகும்.

**சவால் 2. பொதுநிலையினரைப்பற்றிய படிப்பினையிற் போதனைக்கும் சாதனைக்கும் உள்ள இடைவெளியும் வேறுபாடும்**

போதனையிற் குருக்களும் பொதுநிலையினரும் ''நாங்கள் எல்லோரும் திருச்சபை'' என்று தயங்காது கூறுகின்றோம். ஆனல் சாதனையிற்,

குருக்கள் மாத்திரம் திருச்சபை பொதுநிலையினரும் ஒருவகையில் அழைக்கப்பட்டவர்கள் என்றுற்போல் நடக்கின்றோம்.

போதனையில் ''நாங்கள் எல்லோரும் ஒரே சகோதரத்துவம்'' என்கின்றோம். ஆனால், சாதனையிற் குருக்கள் ஞானம் நிறைந்த பிதாக்கள் போலும், பொதுநிலையினர் அறிவற்ற அங்கத்தவர்போலும் நடாத்தப்படுகின்றனர்.

போதனையில் ''நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நாமத்தில் உலகத்திற்கு இரட்சணிய சேவை செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றோம்'' ''சேவையே எமது நோக்கு'' என்றெல்லாம் கூறிக்கொள்ளுகின்றோம். ஆனால், சாதனையில், குருக்களுக்குப் பணிந்து நடக்கும் சேவையாளர்களாக மாத்திரமே பொதுநிலையினர் கணிக்கப்படுகின்றனர்.

இப்பேர்ப்பட்ட போதனைக்கும், சாதனைக்கும் இடையேயுள்ள முரண்பாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

## 22. முடிவுரை :

திருச்சபையில் ஒரு முக்கிய திருப்பத்தை ஆரம்பித்திருக்கின்றோம்

இன்று நாம் திருச்சபையில் ஒரு முக்கிய திருப்பத்தை ஆரம்பித்திருக்கின்றோம். இத்திருப்பம், பொதுநிலையினரும் குருக்களும் திருச்சபையிற் கொண்டிருக்கவேண்டிய இடத்தைத் தீர்மானிப்பது மாத்திரமன்று, அத்துடன் திருச்சபை உலகத்திலே கொண்டிருக்க வேண்டிய இடத்தையும் நிர்ணயிக்கும். இத்திருப்பத்திற்கு ஊற்றுன வத்திக்கான் சங்கம், அதன் வார்த்தையில் மாத்திரமன்று, அதற்கு மேலாக, அதன் ஆவியிலும், கண்ணோட்டத்திலும் அடங்கியிருக்கின்றது. இச்சங்கம் ஆரம்பித்தது கொப்பணிக்கஸ் புரட்சி போன்ற ஒரு கண்ணோட்டப் புரட்சி. அதாவது திருச்சபைக்காகவே உலகம் என்ற கண்ணோட்டத்திலிருந்து உலகத்திற்காகவே திருச்சபை என்ற கண்ணோட்டத்திற்கும், குருக்களுக்காகவே விசுவாசிகளின் கூட்டம் என்ற கண்ணோட்டத்திலிருந்து விசுவாசிகளுக்காகவே குருக்கள் என்ற கண்ணோட்டத்திற்கும் மாற வேண்டும். இப்படியான புரட்சியால மாற்றங்களை அனுபவிப்பதற்கு நாம் வத்திக்கான் சங்கத்தின் ஆவி, கண்ணோட்டம், ஏடுகள் என்பவற்றுடன் நெருங்கி செயற்படவேண்டும்.

பொதுநிலையினருக்கான அழைத்தலும் பணியும் ஒன்றேதான். அதாவது, திருச்சபைக்குள்ளும், உலகத்தினுள்ளும் ''கிறிஸ்து—அவன்'' ஆக வாழ்வதும், செயற்படுவதுமாகும். இவரது அழைத்தலிலே ஒரு தெய்வீக அம்சமுண்டு (a theo-logical dimension) இவன்இறைவனின் மகன்; இதில் ஒரு கிறிஸ்துவ அம்சமுண்டு— (a christo-logical dimension) இவன் கிறிஸ்துவின் சீடன், இதில் ஒரு இறையரசின் அம்சமுண்டு (a basileo logical dimension) இவன் இறையரசைக் கட்டியெழுப்புகின்றான்.

திருச்சபை தனது பெரும்பான்மையான பொதுநிலையினர் என்ற பதத்திற்குத் தன்னகத்தே அர்த்தம் கொடுக்காவிடில், திருச்சபை இன்னும் தாபிக்கப்படவில்லையென்பதே பொருளாகும்.

எனவே நாம் சரியான பாறையில் நீர் தேடி அறையவும், சரியான இடத்தில் எமது வலைகளை வீசவும், சரியான ஆவியின் ஏவுதல்களுக்குச் செவிமடுக்கவும் முயற்சிப்போமாக.

# திருச்சபையில் பொதுநிலையினரின் எழுச்சி


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை; ஆண்டவரின் வார்த்தை அப்படியே ஆகட்டும் | 1 |
| 2. | 1987 ஆயர் அவை ... .. | 1 |
| 3. | வத்திக்கான் சங்கத்தின் வார்த்தையும், கண்ணோட்டமும் | 3 |
| 4. | பொதுநிலையினர் குருக்கள் உறவு, உரையாடல் ... | 3 |
| 5. | முழுத்திருச்சபையியலில் பொதுநிலையினர் ... | 4 |
| 6. | பொதுநிலையினரின் அங்கத்துவம் ... | 5 |
| 7. | குருக்களின் அங்கத்துவம் ... ... | 6 |
| 8. | பொதுநிலையினரின் வளர்ச்சிப் படிகள் ... | 6 |
| 9. | மக்கள் திருச்சபை ... ... | 8 |
| 10. | உலகத்தின் தன்மையை உள்ளபடி ஏற்றுக்கொள்ளல் | 9 |
| 11. | பொதுநிலையினரின் உலக அங்கத்துவ வல்லமையும் திருச்சபை அங்கத்துவ வல்லமையும் ... | 11 |
| 12. | பொதுநிலையினரின் இறைவாக்குரைத்தற் பணி ... | 13 |
| 13. | பொதுநிலையினரின் அரசபணி ... | 14 |
| 14. | பொதுநிலையினரின் அருங்கொடைகள் ... | 15 |
| 15. | பொதுநிலையினரை மீளவும் திருச்சபையில் புனரமைத்தல் | 15 |
| 16. | பொதுநிலையினரின் ஆன்மீகமும், அப்போஸ்தலத்துவமும் | 17 |
| 17. | ஆன்மீகம் ... ... ... | 18 |
| 18. | அப்போஸ்தலத்துவம் ... ... | 19 |
| 19. | பொதுநிலைத் திருப்பணிகள் ... ... | 20 |
| 20. | பொதுநிலைத் திருப்பணியாளர்களை உருவாக்கல் ... | 21 |
| 21. | எம்மை எதிர்நோக்கும் சவால்கள் ... | 21 |
| 22. | முடிவுரை : திருச்சபையில் ஒரு முக்கிய திருப்பத்தை ஆரம்பித்திருக்கின்றோம் | 23 |


St. Joseph's Catholic Press, Jaffna

St. Joseph's Catholic Press, Jaffna

விலை: ரூபா 3-00 (இலங்கை)
,, 1-50 (இந்தியா)